# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 9

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

சுட்டெண்: | | | | | | | | | |

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR

TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |



TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் வினா எழுத்து

அ) இ ☐ ஆ) அ ☐
இ) உ ☐ ஈ) எ ☐

2. பனையினது கிழங்கைப் பிளந்தாற் போல பவளநிறமான கூரிய அலகை உடைய பறவை

அ) நாரை ☐ ஆ) தாரா ☐
இ) வாத்து ☐ ஈ) கொக்கு ☐

3. 'கோவேத' என்ற தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) ஆனைவிழுந்தான் ☐ ஆ) ஆனையிறவு ☐
இ) ஆனைக்கோட்டை ☐ ஈ) அம்பாறை ☐

4. நண்பனோடு கண்ணன் பள்ளிக்குச் சென்றான். இச் சொல்லியத்தில் நண்பனோடு என்ற சொல்லில் இடம் பெற்றுள்ள வேற்றுமை

அ) 5 ஆம் வேற்றுமை ☐ ஆ) 3 ஆம் வேற்றுமை ☐
இ) 4 ஆம் வேற்றுமை ☐ ஈ) 2 ஆம் வேற்றுமை ☐

5. கற்றோர் மட்டும் பொருள் அறிந்து கொள்ளக்கூடிய இலக்கியச் சொல்

அ) திசைச்சொல் ☐ ஆ) வடசொல் ☐
இ) திரிசொல் ☐ ஈ) இயற்சொல் ☐

TEDC -FR

6. 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்னும் நூலை எழுதியவர்

அ) வீரமாமுனிவர் ☐ ஆ) அல்பேர்ட் சுவைட்சர் ☐
இ) ஜி. யூ. போப் ☐ ஈ) கால்டுவெல் ☐

7. அவன் என்பது

அ) புறச்சுட்டு ☐ ஆ) அகச்சுட்டு ☐
இ) அகவினா ☐ ஈ) புறவினா ☐

8. 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரினால் கைப்பற்றப்பட்ட அரசு

அ) கண்டி அரசு ☐ ஆ) கோட்டை அரசு ☐
இ) கரையோரச்சிங்கள அரசு ☐ ஈ) யாழ்ப்பாண அரசு ☐

9. எள் + நெய் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) என்நெய் ☐ ஆ) எண்ணெய் ☐
இ) எள்நெய் ☐ ஈ) எண்நெய் ☐

10. போர்த்துக்கேயர் தமிழ்மண்ணில் காலூன்ற எடுத்த முயற்சிகளை யாழ்ப்பாண மன்னன் முதலாம் சங்கிலியன் முறியடித்த இடம்

அ) மன்னார் ☐ ஆ) பூநகரி ☐
இ) முள்ளிவாய்க்கால் ☐ ஈ) பரந்தன் ☐

11. கார்முகிலைக் கண்டால் அழகு மயில்கள் களிப்பால் ஆலும். இங்குவந்துள்ள எழுவாய் அடைமொழி

அ) கார் ☐ ஆ) அழகு ☐
இ) களிப்பு ☐ ஈ) ஆலும் ☐



TEDC -FR

12. வட்டுடை என்பதன் பொருள்

அ) பாசறை ☐ ஆ) தாலம் ☐

இ) சீருடை ☐ ஈ) போர்வீரர் உடை ☐

13. மற்றவரும் வாழவேண்டும் என நினைப்பவன் நல்லன். இதில் நல்லன் என்பது

அ) குறிப்புவினை ☐ ஆ) தெரிநிலைவினை ☐

இ) ஏவல்வினை ☐ ஈ) எதிர்மறைவினை ☐

14. நெஞ்சக்கல் என்பது

அ) தற்குறிப்பேற்றஅணி ☐ ஆ) உயர்வுநவிற்சிஅணி ☐

இ) உவமைஅணி ☐ ஈ) உருவகஅணி ☐

15. கண்ணீரும் கம்பலையும் என்ற இணைமொழித்தொடர் உணர்த்தும் பொருள்

அ) பெருமுயற்சி ☐ ஆ) பெருமை ☐

இ) பேரின்னல் ☐ ஈ) வசைமொழி ☐

16. மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்ட மொழி

அ) பாளி ☐ ஆ) எலு ☐

இ) தமிழ் ☐ ஈ) சிங்களம் ☐

17. விடிவெள்ளி தோன்றும் திக்கு

அ) மேற்கு ☐ ஆ) கிழக்கு ☐

இ) வடக்கு ☐ ஈ) தெற்கு ☐

TEDC -FR TEDC -FR

18. பார்த்தனன் என்ற சொல்லின் சாரியை

அ) பார் ☐ ஆ) ந் ☐

இ) த் ☐ ஈ) அன் ☐

19. புலம்பெயர் மக்கள் அல்லும்பகலும் அயராது உழைக்கின்றனர். இதில் அல்லும்பகலும் என்பது

அ) இணைமொழி ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

20. திருக்குறளைப் பண்டைப்புலவர்கள் புகழ்ந்து போற்றிய புகழ்மலர்கள் ____________ எனப் போற்றப்படுகிறது.

அ) திருவள்ளுவமாலை ☐ ஆ) திருவருட்பா ☐

இ) ஆசியசோதி ☐ ஈ) திருமந்திரம் ☐

21. எதிர்கால இடைநிலைகள்

அ) கிறு, கின்று ☐ ஆ) ற், ன் ☐

இ) ப், வ் ☐ ஈ) கிறு, ப் ☐

22. தனிநாயகம் அடிகளார் பிறந்த ஊர்

அ) நயினாதீவு ☐ ஆ) நவாலி ☐

இ) கந்தரோடை ☐ ஈ) கரம்பொன் ☐

23. விசயன் ____________ இனத்தைச் சேர்ந்த குவேனியை மணந்தான்.

அ) இயக்கர் ☐ ஆ) நாகர் ☐

இ) சேரர் ☐ ஈ) சோழர் ☐



TEDC -FR

TEDC -FR

TEDC -FR

24. போர்த்துக்கேய மொழிச் சொற்களில் ஒன்று

அ) பென்சில் ☐ ஆ) சாம்பார் ☐

இ) கோப்பை ☐ ஈ) குசினி ☐

25. தமிழர் என்ற சொல்லுடன் ஆறாம் வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதினால்

அ) தமிழரால் ☐ ஆ) தமிழரை ☐

இ) தமிழருக்கு ☐ ஈ) தமிழரது ☐

புள்ளிகள் 25



TEDC -FR

TEDC -FR

TEDC -FR

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

போர், படையெடுப்பு முதலியவற்றால் நாடுகளுக்கிடையே பாதிப்புகளும் இழப்புகளும் ஏற்படுகின்றன. அவ்வாறு ஏற்பட்டாலும் அந்த நாட்டில் செல்வம் அழியாமல் இருக்க வேண்டும். அதனால் எத்தகைய சூழல் வந்தாலும் நாட்டின் செல்வம் அழியாதவாறு, முன் எச்சரிக்கையாக நாம் செல்வத்தைச் சேமித்து வைத்திருக்க வேண்டும். அல்லது இழந்த செல்வத்தை மீண்டும் பெற, நாம் உழைத்து உற்பத்தியையும் பொருளாதாரத்தையும் பெருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக இரண்டாவது உலகப்போரில், பெருமளவில் பாதிக்கப்பட்ட நாடுகள் யப்பானும் செருமனியும். அதனால் அந்நாட்டினரின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இருப்பினும் யப்பானும் செருமனியும் தங்களது கடின உழைப்பால் வளமான நாடுகளாக இன்று மாறிவிட்டன. எதிர்பாராத வகையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் அந்த நாடு பாதிக்கப்படாத வகையில் செல்வம் உடையதாக இருத்தல் வேண்டும், அதுதான் நாடுகளுள் சிறந்தநாடு என்கிறார் வள்ளுவர்.

1. நாட்டின் செல்வம் அழியாதவாறு, முன் எச்சரிக்கையாக நாம் எதைச் சேமித்து வைத்திருக்க வேண்டும்?

______________________________

______________________________

2. இரண்டாம் உலகப்போரில் பெருமளவில் பாதிக்கப்பட்ட நாடுகள் எவை?

______________________________

3. இழந்த செல்வத்தை மீண்டும் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

______________________________

4. எவற்றால் நாடுகளுக்கிடையே பாதிப்புகளும் இழப்புகளும் ஏற்படுகின்றன?

______________________________

5. எதனால் யப்பானும் செருமனியும் இன்று வளமான நாடுகளாக மாறிவிட்டன?

______________________________

| புள்ளிகள் 10 |
|---|



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சத்திமுற்றப்புலவர் மதுரைக்கு யாரைக் காணச் சென்றார்?

______________________________

2. அல்பேர்ட் சுவைட்சரை மிகவும் கவர்ந்த நூல் எது?

______________________________

3. சங்கிலியன் சிலை எங்கே அமைந்துள்ளது?

______________________________

4. வீரத்தாய் தன்மகனைப் போருக்கு எவ்வாறு அனுப்பி வைத்தாள்?

______________________________

5. "நானே இந்நாட்டின் மன்னன்! எவனடா என்னை விசாரிப்பது" இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

6. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தில் நாட்டிய மங்கையர் போல தலைசாய்த்து ஆடிய பயிர் எது?

______________________________

7. எல்லாளனைப் போர் அறத்துக்கு மாறாகச் சூழ்ச்சி செய்து கொன்றவன் யார்?

______________________________

புள்ளிகள் 10



TEDC -FR

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## கதிரவன்

| | | | | |
|---|---|---|---|---|
| சேவல் | கதிரவன் | பரப்பி | மலர்வதும் | உதவிடுவான் |

காலையில் கதிரவன் உதித்திடுவான்
காணும் இருளை விலக்கிடுவான்
கதிர்கள் ______________ எழுந்திடுவான்
கவின் மிகு காட்சி தந்திடுவான்

கோவில் மணிகள் ஒலி எழுப்பக்
காலையில் ______________ கூவிவர
பறவைக் கூட்டம் வாழ்த்திசைக்க
______________ மெல்ல எழுந்திடுவான்

உலகம் சிறக்க வழிவிடுவான்
உயிர்கள் வாழ ______________
வானமங்கை மன மகிழ
வண்ண ஒளியைத் தந்திடுவான்

மழையும் வெயிலும் அவனாலே
மலர்கள் ______________ அவனாலே
மக்கள் வாழ்வதும் அவனாலே
மகிழ்ந்து நாமும் போற்றிடுவோம்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அழகன் காலையில் எழுந்து தோட்டத்திற்குச் சென்றான். வழியில் ஒரு பெரிய ஆலமரத்தைக் கண்டான். அம்மரத்தில் ஒரு கூடு இருந்தது. அக்கூட்டில் சின்னஞ்சிறிய குருவி ஒன்று 'கீச்கீச்' என்று கத்திக் கொண்டிருந்தது. இரைதேடச் சென்று வந்த தாய்ப்பறவை குருவிக் குஞ்சுக்கு உணவு கொடுத்தது. அப்போது வானம் கறுத்து மழைதூறத் தொடங்கியது. இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தவாறு அவன் வீட்டிற்கு ஓடிச் சென்றான்.

1. புறச்சுட்டு ஒன்று தருக.

_______________________________________________

2. அடுக்கிடுக்குத் தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

3. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

4. வந்த என்பது எவ்வகை எச்சம்?

_______________________________________________

5. இங்கு வந்துள்ள இடப்பெயர்களில் ஒன்றைத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

TEDC -FR

TEDC -FR

**ஆ) 1. படித்தான் என்ற சொல்லின் பகுதி, விகுதி இடைநிலையைத் தருக.**

| | **பகுதி** | **இடைநிலை** | **விகுதி** |
|---|---|---|---|
| படித்தான் | | | |

புள்ளிகள் 03

2. **தரப்பட்டுள்ள சொல்லியங்கள் எவ்வகைச் சொல்லியங்கள் என இனங்கண்டு எழுதுக.**

1. சங்கிலியன் யாழ்ப்பாண அரசின் மன்னன்.

_______________________________

2. நீ உன் கடமைகளைச் செய்யத் தவறாதே!

_______________________________

புள்ளிகள் 02



TEDC -FR

TEDC -FR TEDC -FR

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

திரை வேலை பரந்து வேளை திறை பறந்து

1. மாறன் வயலில் ____________ செய்த களைப்பினால் தண்ணீரை மடமட எனக் குடித்தான்.

2. கயிலைவன்னியன் ஒல்லாந்தருக்கு ____________ செலுத்த மறுத்தான்.

3. தமிழர் உலகமெங்கும் ____________ வாழ்கின்றனர்.

4. காலை ____________ மாணவர்கள் மகிழ்ச்சியோடு பள்ளிக்குச் செல்வர்.

5. ____________ கடல் ஓடியும் திரவியம் தேடு.

புள்ளிகள் 05



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**7) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதி நிறைவு செய்க.**

1. கோழி மிதித்துக் ____________________ சாகுமா?

2. தான் பிடித்த முயலுக்கு மூன்று ____________________ .

3. அச்சாணியில்லாத் தேர் ____________________ ஓடாது .

4. பதறாத ____________________ சிதறாது.

5. அன்பான ____________________ ஆபத்தில் அறியலாம்.

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து குறளை நிறைவு செய்க.**

1. நல்லாறு எனினும் கொளல்தீது ____________________

இல்லெனினும் ஈதலே நன்று

( நல்லுலகம், மேலுலகம், கீழுலகம் )

2. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

____________________ செய்தற் பொருட்டு

( வல்லாண்மை, வேளாண்மை, மேலாண்மை )

புள்ளிகள் 05



TEDC -FR

9) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தாயின் தாலாட்டு
- புலவரும் வறுமையும்
- நீர் சென்ற சுற்றுலா
- பிறருக்கு உதவுவோம்

புள்ளிகள் 15

TEDC -FR TEDC -FR



TEDC -FR